# தூதன்

தூதன் - 30 ஆகஸ்ட் - 2021 தூது - 8

நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. அப்போஸ்தலர் 18:10




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| செயலர் மடல் | 01 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 03 |
| மலைமேல் இயேசு மலைபோல் பேச்சு | 04 |
| திருச்சபை ஜெபநாள் | 05 |
| மனோவா குடும்பம் | 07 |
| வேதவினா போட்டி | 09 |
| தெரிந்துகொள்வோம் | 11 |
| Health Tips | 13 |
| Children's Corner | 15 |
| Birthday Celebrants | 20 |
| Wedding Anniversary | 23 |
| Cana | 24 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# செயலர் மடல்

காலையில் கதிரவன் உதித்தெழ வெளிச்சம் தோன்றிவிடும். மாலையில் மறைந்து இருள் சூழ்ந்துவிடும். நடுப்பகலில் காணப்பட்ட சூரிய உஷ்ணமும் தணிந்துவிடும். கொந்தளித்த, சீறியெழுந்த கடல் அலைகளும், கடற்கரையின் மணலைத்தழுவி அடங்கிவிடும். உயிர்க்கொல்லி - உலகையே உருக்குலைத்த - உடைமைகளை சீரழித்த - Corona தொற்று என்று மாறுமோ என்ற ஏக்கங்கள் எல்லாம் அருள்நாதர் இயேசுவின் தயவால், கிருபையால், வார்த்தையால் அடங்கிவிடும். இம்மட்டும் இம்மானுவேலாக கூட இருந்தவர்- கிருபையின் நிழலாக, பகலில் மேகமாக, இரவில் அக்னிஸ்தம்பமாக கூட இருந்து காப்பார்.

வார்த்தையால் வாதைகளை மேற்கொள்ள ஜீவ-சத்திய-நித்திய வார்த்தைகளை பற்றிக்கொள்வோம். ஏழு மாதங்களைக் கடந்து வர கிருபை செய்த கர்த்தர் கரம் பற்றி நடப்போம். ஜெயம் தந்து நடத்துவார்.

ஆலய வழிபாடுகள், Camp ministry, Junior Church, Fasting Prayer, Men/Women Fellowship, Prayer cell போன்ற சிறப்பு நிகழ்வுகள் யாவும் online மூலம் சிறப்பாக, தடையில்லாமல் நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகள் பெரியது. ஜூலை 9-ம் தேதி வெள்ளி முதல் ஒருமணி நேர ஆராதனை வெள்ளி காலை 8:00 மணி முதல் 9:00 மணி வரையும் மாலை 7:00மணி முதல் 8:00 மணி வரையும், சனிக்கிழமை காலை 9:00 மணி முதல் 10:00 மணி வரையும் நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகள் பெரியது. ஆராதனைகளை நடத்தி உதவி செய்யும் Rev.Harrison - Holy Trinity Church, Rev.Rajamanickam,SHJ-CSI, Rev.Ajith,UAQ-CSI, Rev. Jery Rajkumar, ADH-CSI ஆயர்களுக்கும், நமது Fujairah, Ras Al Kaimah கிளைச்சபைகளில் திருவிருந்து ஆராதனைகளையும் நடத்தி உதவி செய்யும் Shj CSI, UAQ CSI ஆயர்களுக்கும் நமது சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது புதிய ஆயர் Rev.Issach Fernandus ஐயா அவர்களும், நமது RAK கிளைச்சபை Assistant போதகராக CSI Synod மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள Madurai-Ramnad Diocese Rev.Prasanth அவர்களும் கர்த்தர் கிருபையால் சுகமாக வந்துசேர தொடர்ந்து ஜெபிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

August 6-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று KG to 6th Grade JC சிறுவர்களுக்கும், 13-ம் தேதி வெள்ளிக்கிழமை 7th Grade to 12th வரையிலான JC சிறுவர்களுக்கும் Retreat online மூலம் நடைபெறும்.

நமது திருச்சபை தாங்கி வரும் 100 மிஷனெரிகள், அவர்கள் குடும்பம், பாதுகாப்பு, தேவைகள் யாவுக்காகவும் ஒவ்வொரு நாளும் பாரத்தோடு ஜெபிப்போம். துபாய் மாதிரி கிராமம் - கொளகூர் பணித்தளத்தில் மிஷனெரி மருத்துவமனையில் குடும்பமாக பணியாற்றி வரும் Dr.Samuel Delightson அவர்கள் மருத்துவ பணிகளுக்காக, உதவியாளர்களுக்காக, பாதுகாப்பிற்காக தொடர்ந்து ஜெபிப்போம். உலக அளவில் Corona Virus தாக்குதலால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகள், உயிர் இழப்புகள், வேலை இழப்புகள் யாவுக்காகவும் ஜெபிப்போம்.

நமது Ajman Prayer Cell பொறுப்பாளராக கடந்த பல ஆண்டுகள் சிறப்பாக நடத்தி வந்த Mrs.Simie Gebin Oliver அவர்கள் தாயகம் சென்றிருப்பதால் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, புதிதாக பொறுப்பேற்றிருக்கும் Mrs.Shermil Vijil Singh அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

கடந்த நாட்களில் Corona Virus மூலம் தாக்கப்பட்டு தங்களுக்கு அருமையானவர்களை இழந்த குடும்பங்களுக்காக சபையாக ஜெபிப்போம். கர்த்தர்தாமே அந்தந்த குடும்பங்களுக்கு ஆறுதல் தந்து வழிநடத்துவாராக.

ஆராதனை நடைபெறுவதற்காக Worship Licence-க்காக எடுத்துவரும் முயற்சிகளில் அரசாங்க அங்கீகாரம் கிடைக்கவும், Bank Transaction-ல் உள்ள தடைகள் யாவையும் கர்த்தர் தாமே நமக்கு முன் சென்று வழிகள் திறந்திட தொடர்ந்து ஊக்கத்தோடு ஜெபிப்போம். அவாந்தர வெளியிலே ஆறுகளை உண்டாக்கும் நம் தேவன் பெரியவர், வல்லவர், நல்லவர் துதிப்போம்.

Babu Jeyaseelan, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"ஆகையால், உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரும்படி, உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்."
யோசுவா 23:11

அகிலம்
அனைத்திலும்
அறிவு, அறம்
ஞானம், புகழ்
காலம், இடம்
பலம் செல்வம்
வேறு
எந்தவித
சிறப்பிலும்
கர்த்தருக்கு
சமமானவர்
நிகரானவர்
அல்லது
கர்த்தரை
மிஞ்சியவர்
எவரும் இல்லை.
ஆதியிலும் - இனி
அந்தம் - வரினும்
சிறப்பு என
கருதும் எந்த
தகுதியும்
திரியேகர்
கர்த்தரிடமே...
இருந்தது
இருக்கிறது
இருக்கும்
பிரபஞ்ச
தோற்றத்தில்
பரமாத்மா
கர்த்தரே...
ஒருவர்
எந்தவழி
எத்தனித்து
பயணித்தாலும்
ஞானமார்க்கத்தை
பின்பற்றினாலும்
அவரின் இறுதி
நோக்கம்
கர்த்தரை அடைவதே!!
ஆகையால்
அன்பரே!...
உருமாறி
உயிர்கொல்லும்
தொற்றுநோய்
உலகினை
அச்சுறுத்தும்
காலமிது...
அனைவருக்கும்
அச்சம் அவசியம்
அதனால்...
அச்சமே
வாழ்க்கை
ஆகிவிடாது
எதுவரினும்
எப்படிவரினும்
விசுவாசத்தால்
விழாது
வாழவைக்கும்
சுவாமி
கர்த்தர் ஒருவரே.
ஆகையால்
சகோதரரே
கர்த்தரில்
அன்புகூரும்படி
கருணைக்கு
நன்றி செலுத்துவோம்
நற்செய்தி கூறியே...
நாம்- எச்சரிக்கையாய்
வாழ்ந்து...
நமது ஆத்துமாக்களை
கர்த்தரிடம்
ஒப்படைப்போம்.
வேதம் ஓதுதல்
ஜெபம் செய்தல்
ஐம்புலன்களை
அடக்குதல்
அடக்கத்துடன்
வாழ்தல்
"ஏழைக்கு
இரங்குகிறவன்
கர்த்தருக்கு
கடன்கொடுக்கிறான்"
எனும் வசனத்திற்கேற்ப
ஏழை எளியவருக்கு
சேவை செய்தல்
இவையாவுமே...
இயேசுவை
அடிபணியும்
எளியவழி,
இயேசுவிடம்
விசுவாசமான
பக்தி - ஈர்ப்பு
இருந்தாலே போதுமே
நமது ஆத்மீக
தாகத்தையும
மனதுடிப்பையும்
இயேசு அறிவார்.
இயேசுவே
நமக்குள்
இருந்தவாறே
நன்றாக
வழிநடத்துவார்.
சர்வலோக
சர்வரோக
சர்வமோக
நிவாரணி
இயேசுவின்
நாமம்தான்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# மலைமேல் இயேசு மலைபோல் பேச்சு

ஆவி ஆத்மா சரீரம் மனிதராச்சு
அந்த சரீரத்துள் இந்த ஆவியாத்துமா
வியாபித்து இருந்தும் அரூபம் ஆகிடிச்சி
ஐம்புல அடுக்இல் ஐயாவின் உணர்விருக்கு

ஆவி தேவனோடு ஆதியிலே இருந்ததாச்சு
தேவ எண்ணம் மண்ணாலே உடலாச்சு
ஆவி நாசியில் ஊதி சுவாசமாச்சு
ஜீவ ஆத்துமா படைப்பு நிகழ்ந்திடிச்சு

அரசுச் சட்ட ஆதரவில் வாழ்ந்துவிட்டால்
அதுவே பூலோக வாழ்வு என்றாகுது
கர்த்தர் சட்டம் கடைப்பிடித்து வாழ்ந்துவந்தால்
தானாய்ப் பரலோக வாழ்வாய் ஆகிடுது

மனித ஆவி தேவ ஆவிதொடர்பினால்
மனித வளங்கள் கனியத் தொடங்கிடுது
மனித ஆத்மா இனிய நடத்தைகளால்
சரீரம் இயங்கச் செய்து விடுகிறது

ஆதி மனிதன் மீறிப் போனதாலே
ஆவித் தொடர்பு துண்டிக்கப் பட்டுவிட்டது
மீதி மனிதத் தொடர்பைச் சாத்தியமாக்குவதில்
தேவ வசனம் வாய்ப்பைத் தருகிறது

தேவன் முன்தான் ஒன்றும் இல்லையென்றும்
தாழ்த்தி நிற்போன் ஆவியில் எளியவனாம்
தேவப் பிரியன் எல்லைக்குள் புகுவதாலும்
தேவபலன் யாவிலும் பூர்த்தி யாக்கிவிடுமாம்

சாந்தம் அமைதி சொந்தம் ஆக்குவது
அந்த ஆவியில் எளிமை என்றுசொல்வது
வந்த வசனத்தில் ஒன்றி யொன்றிநின்று
தந்த வரோடு வாழ்வது பரலோகவாழ்வு!

ஆதாரம் : மத்தேயு 5:3, 1 தெசலோனிக்கேயர் 5:23
கவிதை எண் : 240
ஆக்கம் : மணிமுத்து

## திருச்சபை ஜெபநாள் 01-08-2021 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர், காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்." சங்கீதம் 5:3

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- திருச்சபையின் எல்லாவிதமான ஊழியங்களும், ஆலய ஆராதனைகளும் Team Meeting online மூலம் சிறப்பாக நடைபெறவும், ஜூலை 9–ம்தேதி முதல் வெள்ளிக்கிழமைகளில் காலை 8:00மணிமுதல் 9:00மணி வரையிலும், மாலை 7:00மணிமுதல் 8:00மணி வரையிலும் 120 பேர்களுடனும், சனிக்கிழமை காலை 9:00மணிமுதல் 10:00மணி வரையிலும் 200 பேர்களுடனும் ஆராதனை நடைபெறவும் கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்." சங்கீதம் 6:9

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# மனோவா குடும்பம்

நாற்பது வருடங்களாக பெலிஸ்தியரினால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த இஸ்ரவேலரை மனதுருகும் தேவன் மறுபடியும் விடுவிக்க எண்ணி ஒரு தலைவனை எழுப்பச் சித்தம் கொண்டார். கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பாய் வாழ்ந்த இஸ்ரவேலரின் நடுவே தேவனுக்குப் பயந்து நடந்த மனோவாவின் குடும்பத்தை தேவன் தனது திட்டத்தை நிறைவேற்ற தெரிந்துகொண்டார்.

### 1. ஜெப வீரர்களான தம்பதியர்:

மனோவாவிற்கும் அவன் மனைவிக்கும் பிள்ளையில்லாமலிருந்தது. குழந்தையில்லா தம்பதியினருக்குக் கர்த்தர் தரிசனமாகும் அளவிற்கு ஜெப வீரர்களாயிருந்தனர். மனோவாவின் மனைவிக்கு கர்த்தருடைய தூதனானவர் முதலாவது தரிசனமாகி ஒரு குமாரனை வாக்குப்பண்ணினார். அவள் வந்து தன் கணவனிடம், தனக்குத் தரிசனமானவரின் சாயல் தேவ தூதனின் சாயலைப் போல மகா பயங்கரமாக இருந்தது என்று கூறிய வார்த்தையினால் மனோவா கர்த்தரிடம் மறுபடியும் ஒரு விசை தனக்கும் அந்தத் தரிசனம் வேண்டும் என வேண்டினான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டு மறுபடியும் தரிசனம் கொடுத்தார். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

### 2. பிள்ளையை வளர்க்க கர்த்தரிடம் ஆலோசனைப் பெற்ற குடும்பம்:

கர்த்தர் அவர்களுக்குக் குழந்தை பாக்கியத்தைத் தருவதை வெளிப்படுத்தினபோது, மனோவா, "பிறக்கப் போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பீராக என்று வேண்டிக்கொண்டான்." குழந்தை பிறக்கும் முன்பதாகவே அதை வளர்ப்பதில் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை உண்டு என அறிந்து பிள்ளையை வளர்க்கக் கர்த்தரிடம் ஆலோசனை கேட்டான். பிள்ளை வளர்ப்பு என்பதில், கணவன் மனைவி இருவருடைய பொறுப்பும் அடங்கியிருக்கிறது. இன்றைய காலக்கட்டங்களில் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என இணைய தளம், குழந்தை மனோதத்தவ நிபுணர், ஜோசியர், தீர்க்கதரிசிகளிடம் போய் ஆலோசனை கேட்காமல், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் என்ற நன்றி உணர்வுடன் தேவனிடம் பிள்ளையை எப்படி வளர்ப்பது என்று தேவ ஆலோசனை கேட்டு, அவருடைய வார்த்தைகளின்படி ஜெபத்துடன் வளர்க்க வேண்டும்.

### 3. தன் பிள்ளையின் எதிர்கால தேவதிட்டத்தைப் பெற்ற குடும்பம்:

சிம்சோன் தன் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே "அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்: அவன் இஸ்ரவேலரைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான்" என பெற்றோருக்குக் கர்த்தர் பிள்ளையின் எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடு கொடுத்திருந்தார். கர்த்தர் தரும் பிள்ளைகள் தேசத்தை நடத்திச்செல்லும் தலைவர்களாய் மாறலாம். ஊழியர்களாய் உருவாகி தேவனுக்காக வல்லமையாக பயன்படுத்தப்படலாம். நம் பிள்ளைகளும் தேவ திட்டத்தை நிறைவேற்ற பிறந்தவர்களே என்பதை உணர்ந்து, நம் பிள்ளைகளுக்காகக் கர்த்தர் வைத்துள்ள திட்டத்தைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்று ஜெபத்துடன் வளர்க்க வேண்டும்.

4. விசுவாச குடும்பம்:

வந்தவர் தேவதூதன் என்று அறிந்தும் "நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" என பயப்பட்ட கணவரிடம் "கர்த்தர் நம்மைக் கொன்றுபோட சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக் கொள்ளமாட்டார்" என விசுவாச வார்த்தைகளைக் கூறி தைரியமூட்டினாள். மனோவாவும், தேவன் தரப் போகிற குழந்தையைக் குறித்து எந்த சந்தேகமும் இல்லாமல் விசுவாசத்தோடு தங்களது பொறுப்பைப் பற்றியே தூதனிடம் கேள்வி கேட்டான்.

5. சிம்சோனின் தவறுதல்கள்:

சிம்சோனுக்கு அழைப்பு, அபிஷேகம், பலம் இருந்த போதிலும் அவர் ஒழுக்க ரீதியாகவும், பெண்கள் விஷயத்திலும் பலவீனமாக இருந்தார். அவனுடைய பெலவீனத்தினிமித்தம் கர்த்தருடைய வார்த்தைகள் மீறப்பட்டது. தங்களை ஆளுகை செய்யும் புறஜாதிய பெண்ணொருத்தியை நேசித்தான். புறஜாதியாரோடு கலவாமல் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்பது தேவன் இஸ்ரவேலருக்கு அளித்த கட்டளை. புறஜாதிப் பெண் வேண்டாம் என்று தடுத்த பெற்றோருக்குக் கீழ்படியவில்லை. கீழ்படியாத மகனுடைய தவறான தீர்மானத்திற்குப் பெற்றோரும் பெண்பார்க்க திம்னாத்திற்குப் புறப்பட்டனர். "அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி இது கர்த்தரின் செயல்" என வேதம் குறிப்பிட்டிருந்தாலும், நசரேய விரதத்தைக் குறித்த மூன்று கட்டளைகளையும் சிம்சோன் மீறினது மிகப் பெரிய பாவமே. இதனால் தேசத்தை ஆள வேண்டியவன் தேவ வல்லமையை இழந்து கண்கள் பிடுங்கப்பட்டு, பிறருக்கு வேடிக்கைக் காட்டும் கோமாளியாகக் கருதப்பட்டான். மரண வேளையிலும் பழிவாங்க ஜெபித்து பெலிஸ்தரோடு கூட என் ஜீவன் மடியக்கடவது என ஜீவனை விட்டு வாலிப வயதிலேயே அகால மரணமடைந்தது வேதனையும் நமக்கு எச்சரிப்பையும் தருகிறது. தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட சிம்சோன் தன்னுடைய பிரதிஷ்டையைக் காத்துக் கொண்டு, 1தீமோத்தேயு 2:22ல் கூறியபடி பாலினத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்தோடு கர்த்தரையே சார்ந்திருந்தால் இன்னும் அநேக பெரிய காரியங்களைத் தேவனுக்காகச் செய்து இன்னும் பல வருடங்கள் இஸ்ரவேலரை நல்வழியில் நியாயம் விசாரித்திருக்கலாம். அன்றுள்ள பெலிஸ்தரின் பிரச்சனை இன்று வரை இஸ்ரவேலரின் வாழ்வில் தொடருகிறதைப் பார்க்கலாம்.

பெற்றோராகிய ஒவ்வொருவரும் கர்த்தர் தந்த பிள்ளைகளின் வாழ்வின் நோக்கத்தை தேவனிடம் கேட்டு, சரியாய் அறிந்து ஜெபத்துடனும், கண்டிப்புடனும் கர்த்தருக்காக வளர்க்க கவனம் செலுத்த வேண்டும். நமது பிள்ளைகளுக்காக வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிப்போமாக. அப்படியானால் நமது பிள்ளைகளைக் காக்கும் "அதிசயம்" என்னும் நாமமுடையவரின் பாதுகாப்பு வேலி அவர்களை நிச்சயம் சூழ்ந்துக் கொள்ளும். பிள்ளைகளை வளர்த்தும் பணி ஒரு கடினமான, உத்தரவாதமான ஒரு பொறுப்பான பணி தான். இதை சந்தோஷத்துடன் மன நிறைவுடன் தேவனுக்கு உகந்தபடி செய்ய தேவன் நமக்கு உதவி செய்வாராக.

இனிதா மோசஸ்.

# வேதவினா போட்டி - ஆகஸ்ட் 2021

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(எஸ்தரின் சரித்திரம்)

கீழ்கண்ட வினாக்களுக்கு எஸ்தரின் சரித்திரம் அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. சூசான் நகரம் கலங்கிற்று. வசனக்குறிப்பு எழுதுக.
2. யூதருக்குத் துணைநின்றவர்கள் யார்?
3. தூக்கிலிடப்பட்ட பத்துபேர்கள் யார்?
4. 7, 127, 180 வசனக்குறிப்பு எழுதுக.
5. எஸ்தரின் தகப்பனார் பெயர் குறிப்பிடுக.
6. ஏழு பிரபுக்கள் பெயர்கள் குறிப்பிடுக.
7. தன் வீட்டண்டையிலே தூக்கில் தொங்கினவர் யார்?
8. வர்மம் வைத்து வகைதேடினவர்கள் யார்?
9. அரமனை வாசலிருந்தான், அதிகாரியானான்,

   ராஜாவின் கனம் பெற்றான், மேன்மேலும் பெரியவனானான். வசனக்குறிப்பு எழுதுக.
10. உக்கிரம் நிறைந்தவனானான், வகை தேடினான், மூர்க்கம் நிறைந்தவனானான், திகிலடைந்தான், முக்காடிட்டுக்கொண்டான், முகத்தை மூடிப்போட்டார்கள். வசனக்குறிப்பு எழுதுக..

Bro.I.சைமன்,

சபை ஊழியர்.

## July 2021 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. அனனியா நெகேமியா 7:2
2. அலங்கத்தை, அலங்கமெல்லாம், இணைந்து, வேலை செய்கிறதற்கு நெகேமியா 4:6
3. ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா, அரபியனான கேஷேமும் நெகேமியா 2:19
4. தண்ணீர் வாசலுக்கு முன்பான வீதியிலே நெகேமியா 8:1
5. நெகேமியா நெகேமியா 6:3
6. தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியன் எலியாசிப் நெகேமியா 13:4-7
7. நெகேமியா நெகேமியா 1:4
8. அலங்கமானது 52 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. நெகேமியா 6:15
9. நெகேமியா, எஸ்றா நெகேமியா 8:9
10. ஆசாப் நெகேமியா 2:8

## July 2021 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. அனித்தா ஆல்வின்
2. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
3. திருமதி. பொன் டாப்னி ஜான்சன்
4. திருமதி. இனிதா ஜோனா
5. திருமதி. ரீட்டா ஸ்டீபன்
6. திருமதி. ஆன்றோ ஆன்சி
7. திரு. V.மோகன்
8. திருமதி. பெமி டார்வின்
9. திருமதி. மொர்லின் விஜில்
10. திருமதி. ஷாமினா பென்னி

# தெரிந்து கொள்வோம்

**மிஷனெரிகள் பகுதி 93**

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37**

Rev.Dr.ஹெர்மன் ப்ரட்ரிக் மாக்லிங்



அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் 1869-ம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் உள்ள சிலுக்குவார்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை திரு. வேதமுத்து. இவர்கள் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவர்கள். பின்னர் சீர்திருத்தத் திருச்சபையில் சேர்ந்தார். திரு. வேதமுத்து அவர்கள் நிலக்கோட்டை பகுதியில் ஆசிரியராகவும், நாட்டு வைத்தியராகவும் பணிசெய்தார். இவருக்கு 6 பிள்ளைகள். 4 ஆண், 2 பெண். இவரது கடைசி மகன் சந்தியாகு.

அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் 1882-ம் ஆண்டு பசுமலையில் உள்ள பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று தேர்ச்சி பெற்றார். 1891-ம் ஆண்டு முதல் பசுமலை உயர்நிலைப் பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றினார். பசுமலை இறையியல் கல்லூரியில் இறையியல் ஆய்வுகளைத் தொடர்ந்தார். தனது இறையியல் ஆய்வுகளை வெற்றிகரமாக முடித்து 1908-ம் ஆண்டு போதகராக அருட்பொழிவு பெற்று 1911-ம் ஆண்டு பசுமலை சபைக்குப் போதகரானார்.

1917-ம் ஆண்டு தென்னிந்திய ஐக்கியத் திருச்சபையின் தலைவராகச் செயல்பட்டார். 1919-ம் ஆண்டு தென்னிந்திய ஐக்கியத் திருச்சபையின் (SICU) நடுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சந்தியாகு அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர் மற்றும் சிறந்த படைப்பாற்றல் கொண்ட கவிஞர். இயற்கையான, ஆக்கபூர்வமான திறமை மற்றும் கவிதை நயம் கொண்ட கவிஞர்.

அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் எழுதிய பாடல் "தந்தேன் என்னை இயேசுவே". அவர் வத்தலக்குண்டு திருச்சபையிலிருந்து வேறு ஆலயத்திற்கு மாறவிருந்தபோது இயேசுவிடம் பிரார்த்தனையாக எழுதினார். இந்தப் பாடலின் வரிகள் அவரது ஆன்மீகப் புரிதலையும், சமூக சிந்தனையையும் தெளிவாக அறிவிக்கின்றன.

அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் ஒவ்வொரு பாடல்களையும் முழங்காலில் நின்றே இயற்றினார். 22-க்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் இவர் இயற்றியுள்ளார். அவற்றில் பல கீர்த்தனைப் பாடல்களை நாமும் நமது ஆலய ஆராதனைகளில் பாடி வருகிறோம்.

1. தந்தேன் என்னை இயேசுவே
2. தாசரே இத்தரணியை அன்பாய்
3. தேவனே நான் உமதண்டையில்
4. நித்தம் முயல் மனமே
5. வரவேணும் பரனாவியே
6. விந்தைக் கிறிஸ்தேசு ராஜா... இன்னும் பல.

அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் ஜாதி மத பேதமில்லாமல் மக்களுக்குச் சேவை புரிந்தார். மிகவும் நேர்மையானவர், சக மனிதர்களிடம் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் நேசித்தார். கிறிஸ்துவின் போதனைகள் மூலம் மக்களை வழிநடத்தி அவர்கள் வாழ்வு உயரச் செய்தார்.

அருள்திரு வே.சந்தியாகு அவர்கள் 1929-ம் ஆண்டு உடல்நலக்குறைவால் நவம்பர் மாதம் 28-ம் நாள் தனது 60-வது வயதில் கோதுமை மணியானார். இவரது அடக்க ஆராதனையில் அநேக ஹிந்து மற்றும் இஸ்லாமியர்களும் கலந்துகொண்டு போதகருக்கு அஞ்சலி செலுத்தினர். இவரது அடக்க ஆராதனையில் இவர் எழுதிய கீர்த்தனை பாடல்கள் பாடப்பட்டது. அருள்திரு வே.சந்தியாகு நினைவாக வத்தலகுண்டு ஊரில் அவரது கல்லறையில் 10 அடி உயர சிலுவை நிறுவப்பட்டுள்ளது.

R.ஜெபர்சன்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஆகஸ்ட் 2021

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-08-2021 | திருமணம்: திருமணத்தை கனப்படுத்துதல் | மல்கியா 2:13-16 | 1 கொரிந். 13:1-13 | மாற்கு 10:2-9 | 45 |
| 13-08-2021 | ஞானஸ்நானம்: கிறிஸ்துவோடு மரித்து உயிர்த்தெழுதல் | ஆதியா. 7:11-24 | ரோமர் 6:1-14 | யோவான் 12:20-26 | 29 |
| 20-08-2021 | தூயபலி: தூய தியாகமாகிய திருவிருந்து | 2இராஜா. 4:42-44 | 1 கொரிந். 11:23-30 | யோவான் 6:48-59 | 100 |
| 27-08-2021 | பன்முகத்தன்மை: பொதுவான மானிடமும் பற்றுறுதி பகிர்தலும் | யோனா 4:1-11 | அப்போ. 8:26-40 | மத்தேயு 22:1-14 | 82 |

## DRY EYES

### What is Dry eyes :

Dry eyes develop when there's a problem with your natural tears. You may not produce enough tears or they may evaporate too quickly. Dry eyes also occur when your tears don't contain the right amount of each essential component.

Tears are more than just water; they contain mucus, fatty oils, and numerous proteins and other beneficial substances. Your tears are made up of three layers, which are collectively known as the tear film.

### Why are tears so important for healthy eyes?

Every time you blink, tears flow across the cornea, the clear, dome-shaped structure covering your eye. After you blink, the tear film starts to thin, but it should maintain a moisturizing cover over your eyes until the next time you blink, when a thicker tear film is reestablished.

### If Your Eyes Are Dry ...

You might feel like you have sand in your eyes, or they might burn or itch. You might be sensitive to light, have blurry vision, or, in some cases, your eyes might water. And you may have a tough time wearing contact lenses

### What causes dry eyes:

You may be more likely to get dry eyes if:

- you're over the age of 50
- you wear contact lenses
- you look at computer screens for a long time without a break
- you spend time in air conditioned or heated environments
- it's windy, cold, dry or dusty
- you smoke or drink alcohol
- you take certain medicines

## Prevention:

If you experience dry eyes, pay attention to the situations that are most likely to cause your symptoms. Then find ways to avoid those situations in order to prevent your dry eyes symptoms. For instance:

Avoid air blowing in your eyes. Don't direct hair dryers, car heaters, air conditioners or fans toward your eyes.

Add moisture to the air. In winter, a humidifier can add moisture to dry indoor air.

Consider wearing wraparound sunglasses or other protective eyewear. Safety shields can be added to the tops and sides of eyeglasses to block wind and dry air. Ask about shields where you buy your eyeglasses.

Take eye breaks during long tasks. If you're reading or doing another task that requires visual concentration, take periodic eye breaks. Close your eyes for a few minutes. Or blink repeatedly for a few seconds to help spread your tears evenly over your eyes.

Be aware of your environment. The air at high altitudes, in desert areas and in airplanes can be extremely dry. When spending time in such an environment, it may be helpful to frequently close your eyes for a few minutes at a time to minimize evaporation of your tears.

Position your computer screen at eye level. If your computer screen is above eye level, you'll open your eyes wider to view the screen. Position your computer screen at eye level so that you won't open your eyes as wide. This may help slow the evaporation of your tears between eye blinks.

Stop smoking and avoid smoke. If you smoke, ask your doctor for help devising a quit-smoking strategy that's most likely to work for you. If you don't smoke, stay away from people who do. Smoke can worsen dry eyes symptoms.

## When to see a doctor:

See your doctor if you've had prolonged signs and symptoms of dry eyes, including red, irritated, tired or painful eyes. Your doctor can take steps to determine what's bothering your eyes or refer you to a specialist.


" The righteous cry out, and the lord hears them ;
he delivers them from all their troubles" Psalm 34:17

Selvakumari Babu

# Children's Corner

*This month kids' corner concentrates on DIVIDED KINGDOM – KING BAASHA 1 KINGS 15:16-34, 16:1-8, 2 CHRO 16:1-5. Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*

**LEARN SOMETHING NEW :** Tirzah was a city in the central hills of Samaria, north east of Shechem. It was originally a Canaanite city-state whose king was killed when the Israelites conquered Canaan in 1406 BC (Jos 12:24). After the collapse of the United Monarchy of Israel and Judah on the death of King Solomon in 931 BC, Jeroboam built a royal residence at Tirzah (1 K 14:17). King Baasha moved the capital of the northern kingdom of Israel to Tirzah in 910 BC.







## Grade 3 to Grade 5

**MATCH THE FOLLOWING**

| | |
|---|---|
| 1) Baasha was the | Napthali |
| 2) Jehu is a | Jeroboam |
| 3) Baasha is from | whoever belongs to Baasha |
| 4) In the 36th year of the reign of Asa | son of Baasha |
| 5) Syrian king accepted | Prophet |
| 6) Storage cities of | 3rd king of Israel |
| 7) Baasha walked in the way of | burial place of Baasha |
| 8) The dogs shall eat | Issachar tribe |
| 9) Tirzah | the gold and silver sent by Asa |
| 10) Elah | Baasha came up against Judah and built Ramah |

**GRADE 6 AND ABOVE**

**BAASHA'S REAL OFFICIAL TRAILER : DESCRIBE THE EVENTS FROM THE STORY IN THE ORDER THAT HAD HAPPENED ACCORDING TO THE ILLUSTRATED PICTURE**







# SEQUENCING

## BAASHA MOVIE REEL

ABOUT ME
KING BAASHA










GRADE 6 AND ABOVE














**Note: Please send your answer to the pastor by 15th of this month**

## Answers for the month of July 2021
## (DIVIDED KINGDOM: KING NADAB ($2^{ND}$ KING OF ISRAEL) 1 KINGS 15:25-31)

### GRADE 3 TO GRADE 5 NADAB'S TALK SHOW:

1) Jeroboam (1 KINGS 15:25)
2) 2 years (1 KINGS 15:25)
3) Baasha (1 KINGS 15:27-28)
4) Baasha was from the house of Issachar (1 KINGS 15:27)
5) He walked in the way of his father Jeroboam (1 KINGS 15:26)
6) God may have relented and allowed Nadab the dynasty his father had forfeited

### GRADE 6 AND ABOVE MY BIBLE STUDY ON KING NADAB

1) 2 Chro11:14 specifically tells us that both Jeroboam and his sons were responsible for driving God's priests out of the land of Israel.
2) He did evil in the sight of the LORD, and walked in the way of his father. (1 KINGS 15:26)
3) In the $2^{nd}$ year of king asa rule, Nadab came to power in Israel (north). (1 KINGS 15:25)
4) In the 3rd year of Asa, Baasha killed Nadab. (1 Kings 15: 28)
5) Baasha was the son of Ahijah. 2) He was from the house of Issachar. 3) He was one of the general in Nadab's army. (1 KINGS 15:27 (A))
6) Baasha killed Nadab at Gibbethon (1 KINGS 15:27)
7) According to the word of the LORD which He had spoken by His servant Ahijah. God's word got fulfilled in 1 KINGS 15:30 Baasha did not leave to Jeroboam anyone that breathed, until he had destroyed everyone.
8) Because of the sins of Jeroboam, which he had sinned and by which he had made Israel sin, because of his provocation with which he had provoked the LORD God of Israel to anger. (1 KINGS 15:29).
9) We can be sure that king Nadab was not given any burial, for according to the prophecy, the corps of any descendant of king jeroboam who dies in the field shall be eaten by birds. (1 KINGS 14:11)
10) King Nadab had a chance to rid the land of idolatry and lead the nation in worshiping the Lord. But he failed.

Priya Singh

## Last months Childrens Corner prize winner

**Correct answer Participants:** **GRADE 3 TO GRADE 5** 1) Sarah Arul 2) Tiana 3) Mark

**GRADE 6 TO GRADE 8** 1) Jaymie Joseph 2) Lenofa Joy 3) Trinita

**GRADE 9 AND ABOVE** 1) Maisie Fedora 2) Nickolyn Nixon 3) Karen Singh

**Good attempt Participants:** **GRADE 6 TO GRADE 8** 1) Hannah Evangeline 2) Jerson 3) Sanjay Sumesh 4) Jenica Roshan

**GRADE 9 AND ABOVE** 1) Gracelin 2) Joel Sumesh 3) Alston Samuel




## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்
Mr. V.Mohan அவர்களின் சகோதரர்
Mr. V.Rajasekar அவர்கள் கடந்த 20-06-2021 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Merlene Lambert அவர்களின் சகோதரர்
Mr. Reagan Simson அவர்கள் கடந்த 06-07-2021 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Suguna Thangamani அவர்களின் கணவர்
Mr. M. Thangamani அவர்கள் கடந்த 11-07-2021 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# BIRTHDAY CELEBRANTS - AUGUST 2021

## DUBAI

1 Miss. Beulah Jasmine Asirvatham
1 Miss. Jeeva Martinaal Karunagaran
1 Master Gideon Chris Hemanth
1 Master Eric Dhas
1 Mr. Simeyon Sundar Raj
1 Mrs. Nithya Priya Vidyasagar
2 Master Shane William Noble
2 Master Jubal Samuel
2 Miss Angelin Metilda John Suresh
2 Miss Aria Joshua Durairaj
2 Miss Jasper Jeyakumar
2 Mrs. Irish Rosy Ponchristopher
3 Mrs. Daphne Theodore
3 Mrs. Smiley Gracelin Peter Thomson
4 Mr. J.Andrus
4 Mr. J.Godwin Dinker
4 Mrs. Kavitha Samuel Theodore
5 Miss Josephin Gifta Godwin
5 Mr. E.Allen Bruce
5 Mrs. Arunya Deelan David
6 Miss Jennifer Sharon Anand Samson
6 Mrs. Jerin Prabha Joseph
6 Mr. David Johnson
6 Miss Benita Stalin Raja
7 Mr. A.Evelin Anand
7 Miss Sharon Gifta Prem Kumar
7 Master Meriton Koil Dhasan Paul Durai
7 Mrs. Jeyaprabha Joshua Turaimony
8 Mrs. Mercy Sampath
8 Master Donato Shalom Raja Ratnam
8 Miss Karin Abrena Sam Kingston
8 Master Jeswin Samuel Jesudasan
8 Miss Kezia Joy Noble
8 Mr. Billy Joseph
9 Mrs. Bemlin Cherubin Ebenezer
9 Mrs. Retna Johnson
9 Mrs. Vidhya Mary
10 Mr. R.Jebakumar
10 Miss Sherlin Loyd
10 Master Jeffrey Zachariah Jayaraj
10 Mr. J.Hilton Jose
10 Master Driessen Samuel Davis Jeyakumar
10 Miss Andrea Samantha Ruban
10 Miss Roselyn Jeevin Maxwell
11 Mr. Francis Jeyapaul
11 Mr. Jayaseelan Dennis
11 Dr. Sweetlin S.Benjamin
12 Mr. Jayaraj Sundar Singh Thomas
12 Master Joshua Ranjith Singh

12 Miss Rimona Amose
12 Master Shane Daniel Stephen Jebathurai
13 Dr.(Mrs.) Vijaya Kumaradhas
13 Mrs. Joseline Ruba Ben Selva
13 Mrs. Selin Julia Stalin Prabhu
14 Mrs. Gladys Hemanth
14 Mrs. Florence John
14 Mr. M.J.David Jaisingh
14 Miss Caroline Joshna Steward Jones
15 Mr. S.Silas
15 Mrs. Priyadharshini Billy Joseph
16 Mrs. Anita Alwyn
16 Miss Jeena Sara Jebakumar
16 Master Ferick Ritwick Justin Robert
16 Miss Angeline Sara
16 Mrs. Julie Asha Harold
17 Master Shaun Chris John Christopher
17 Mr. S.Gratio Patrick
17 Master Yabesh Pranov Jeevaraj
17 Miss Audrey Vincia Divin
18 Mr. Winston Selvin
18 Mr. Nimal Jose Nicholas
18 Miss Alfreda Grace Micheal
18 Master Steve Anderson Gabriel Andrews
18 Mr. Vidyasagar Aiyasamy
18 Mr. Beral Max Maragatham
19 Mrs. Angeline Sudhakar Jayaseelan
19 Mr. Silvester Raj S.R
20 Mr. W.P.Jeyasingh
20 Miss. Kibble Sharon Jeya Singh
20 Miss Akshaya Selva Mani
20 Mr. Sunil Soundrapandian
21 Mr. M.Phillips Charles Raja
21 Mr. Theodore Kirupakaran
22 Mrs. Sylvia Dennis
22 Mrs. Ebancely Paul Jebasingh
22 Mr. Godwin M.A.Jayakumar
23 Miss Sheffina Silas
23 Mrs. Nalini David
23 Mrs. Preetha David Rajinikanth
23 Master Liam John Ruban Jebadurai
23 Mrs. Deva Sathya
24 Miss Johanna John Jeyapal
24 Mrs. Nirmal Subitha Bencin Bensam
24 Master Aaron John Kingsly
25 Mrs. Mallika Julius
25 Mr. C.Andrew Bildass
25 Miss Augusta Christy Arul Raj
25 Master Jerwin Jeyakumar
25 Master Joel Sumesh
25 Master Bentley Jasiel Binukumar
26 Mrs. Delighta Riyani Isaac
26 Master Darin Georaj Rajeswararaj

26 Mr. J. Peter Thomson
26 Master Jeffrey Thomas David
27 Master Santo Paul Jayapaul Sampath
27 Master Shefrin Samraj
28 Miss Suneeta Caroline Julius
28 Mrs.Stella David
28 Mr. B.Jeevaraj
28 Master Rishwin Sam Stalin
29 Mrs. Mercy Rose Hannah James Kumar
29 Mr. E.Paul Jebasingh
29 Mrs. Swarnalatha Joseph Gabriel Andrews
30 Mrs. Marial Rukmani Inbakumar
30 Master Ryan Joe Ashok
31 Miss Sharon David
31 Mrs. Andrina Monish
31 Mr. Shankar Shanmugam

## FUJAIRAH

1 Master.Jonathan Sathyan
2 Master.Bonson Suresh Kumar
2 Mr. Selvaraj Louis
8 Miss Anjelo Sherin Shibu
9 Miss. Davida Rose Sam Kingsley
10 Master Fedrin Jeno
17 Master Andrew Daniel
17 Mr. L.Robin
19 Mr. J.Jaya Singh
21 Miss. Sharene Wincy Robin ChandraKumar
22 Mr. George Rathinasamy
25 Mr. Sinukumar Selvan
26 Mrs. Jayasutha Isravel
26 Master Kevin Immanuel Suresh A
27 Mr.C.Jobi Mon
28 Mrs. Shanthi Jayasingh
31 Mr. R.Ruban Thanasingh

## RAS AL KHAIMAH

2 Miss P. Aksha Prince
3 Mr. Jacob Raj Kamal
4 Mrs. Arul Jesu Julie Kelvin John
5 Miss Aafrin Vifanshi Vijay
5 Miss Persey Yesupatham
5 Miss Stephy Yesupatham
7 Mrs. Reficelin Yobu
8 Mr. Bennit Solomon S.
8 Master Jerson Johnson
11 Master Jenin Paul Arulraj
15 Mrs. Asha Durai
16 Mr.Y.Edwin Nayagam
17 Master Aaron Prince Nelson
22 Miss Daflin Blessy Baburaj Singh
29 Miss Jessica Rajesh
31 Mr.S.Joe John Packiaraj

# WEDDING ANNIVERSARY CELEBRANTS - AUGUST 2021

## DUBAI

2 Mr. & Mrs. Christopher Kesavan
2 Mr. & Mrs. B. Immanuel Ramesh
7 Mr. & Mrs. Shehan Ashly Mohana Dhas
9 Mr. & Mrs. P.Lazer
11 Mr. & Mrs. John Marshel Earnest
12 Mr. & Mrs. K.C.Stalin
15 Mr. & Mrs. S.Daniel
17 Mr. & Mrs. Isravel David Livingston
17 Mr. & Mrs. V.N.Raja Velan
17 Mr. & Mrs. Mithin Jones
17 Mr. & Mrs. Joshua Arthur
19 Mr. & Mrs. Peter Thomson
19 Mr. & Mrs. J.Selin Selva Kumar
20 Mr. & Mrs.Sidharth Paul Julius
20 Mr. & Mrs. T.Jose Albin
20 Mr. & Mrs. D.Ananda Emmanuel Durai Singh
20 Mr. & Mrs. Bright Johny
20 Mr. & Mrs. Allen Bruce
21 Mr. & Mrs. Steward Jones
21 Mr. & Mrs. Sam Joe Lesly
21 Mr. & Mrs. Divin Christopher
21 Mr. & Mrs. Monish Daniel
22 Mr. & Mrs. D.Jermiah Daniel
22 Mr. & Mrs. James Gnana Prakasam
23 Mr. & Mrs. Godwin Sanjiv Kumar
23 Mr. & Mrs. Ranjith
23 Mr. & Mrs. Vairavanathan
24 Mr. & Mrs. V.Jeyakumar
24 Mr. & Mrs. Manoj Kumar Balan
25 Mr. & Mrs. Andhria Lawrence
27 Mr. & Mrs. S.P.Ben Selva Sunil
27 Mr. & Mrs. Jayakumar Ebinizer
28 Mr. & Mrs. Ginesh Selson Muthiah
28 Mr. & Mrs. P.Samuel Subi
29 Mr. & Mrs. J.Kingson
30 Mr. & Mrs. B. Arul Raj
30 Mr. & Mrs. S.Christopher

## FUJAIRAH


5 Mr. & Mrs. R.Prasanna Raj
20 Mr. & Mrs. S.Godwin Joe Paul
21 Mr. & Mrs. John Packiaraj
21 Mr. & Mrs. Regin David
22 Mr. & Mrs. Star Jayaseelan
24 Mr. & Mrs. K.Raja Joseph
26 Mr. & Mrs. Christob Daniel Rajan Jayakumar
30 Mr. & Mrs. Shibu A.

## RAS AL KHAIMAH

1 Mr. & Mrs. G.Daniel
23 Mr. & Mrs. Albin Jayaraj
24 Mr. & Mrs. Rajesh Paramanandam
29 Mr. & Mrs. Eban Yesudian Nayagam

## GRAPE VINEYARD IN EVERY HOUSE 12





# My Library

# CANA

Book 54

- Priya Singh

## PILGRIM'S WORDINGS 10

One of the early pilgrims to Cana, the Anonymous Pilgrim of Piacenza, confessed in 570 to an act of religious graffiti. "Our Lord was at the wedding," he wrote, "and we reclined upon his very couch upon which I, unworthy that I am, wrote the names of my parents."

## 3 LOCATION





Cana's actual location is uncertain, with at least three possible candidates. But the commemoration of the miracle of the wine is traditionally fixed at Kefer-Kenna (also known as Kefr Kana and Kfar-Cana), about 5km north-east of Nazareth on the road to Tiberias.

## CHAPEL DEDICATED TO ST BARTHOLOMEW 8



Not far from the Franciscan church is the Greek Orthodox Church of the Marriage Feast, with two large stone jars claimed to be two of the original water pots.The town also has a chapel dedicated to St Bartholomew, one of Jesus' disciples.who some scholars identify with Nathanael of Cana.

## 5 STONE JAR INSIDE GREEK ORTHODOX CHURCH



# How to make the Library Book

You can build up your own library with the books we give every month. Follow the instructions to make the book.

1. Fold along the dotted line in the centre.
2. Cut out along the dotted lines in the centre using scissors.
3. Then cut along the dotted lines you will get three rectangular parts.
4. Keep page 10 on top of page 8. Then keep page 12 over that. Likewise keep the other pages also.
5. Fix them together using staples. your Library Book is ready.

2

## 4 GREEK ORTHODOX CHURCH OF ST. GEORGE

In the center of the village are a few remains of ancient buildings and burial caves. The villagers have built new houses to the southeast and northeast of the ancient village. The most important site in the village is the Catholic Church, built in 1879, on the traditional site of the miracle of the wine. Beside this church is the Greek Orthodox Church of St. George, built in 1886,which houses two stone jars that Greek Orthodox followers believe are the jars in which Jesus performed the miracle of the wine.

## 6 TRADITIONAL GRAPE WINE





Here the Franciscans, relying on the testimony of early pilgrims including St Jerome, established themselves in 1641. And here streetside vendors sell Cana wine.The Franciscans believe excavations beneath their present church, dating from the early 1900s, confirm the existence of an early place of worship, perhaps a Jewish-Christian synagogue, on the site.

## 11 CANA HAS MORE MUSLIMS NOW

One way or the other, in the Roman-Byzantine period (1,000-2,000 years ago), there was a large Jewish community here, but apparently by the Mameluke period (about 800 years ago) most of the residents of Kafr Cana were Christian, although there was still a Jewish community here, too. Today most of the residents of Kafr Cana are Muslim.

## 9 SECOND MIRACLE BROUGHT HEALING



The second time Jesus visited Cana, he was met by a distressed official of the court of Herod Antipas (John 4:46-49). The official lived at Capernaum — which Jesus was soon to make his home town — and he had come to plead for his son, who was dying.Jesus, who had earlier proved he could make good wine from water, now showed he could heal from 30km away. “Go; your son will live,” he told the official.

## 7 STONE JAR



Beneath the sacristy of the present Franciscan church were found remains of dwellings dated back to the 1st century and an ancient basilica with three apses in cross-like form. In a crypt a small stone cistern was found fitted into a flagstone floor.

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - ஆகஸ்ட் 2021

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யோசுவா 3 | சங்கீதம் 126-128 | ஏசாயா 63 | மத்தேயு 11 |
| 2 | யோசுவா 4 | சங்கீதம் 129-131 | ஏசாயா 64 | மத்தேயு 12 |
| 3 | யோசுவா 5,6:1-5 | சங்கீதம் 132-134 | ஏசாயா 65 | மத்தேயு 13 |
| 4 | யோசுவா 6:6-27 | சங்கீதம் 135,136 | ஏசாயா 66 | மத்தேயு 14 |
| 5 | யோசுவா 7 | சங்கீதம் 137,138 | எரேமியா 1 | மத்தேயு 15 |
| 6 | யோசுவா 8 | சங்கீதம் 139 | எரேமியா 2 | மத்தேயு 16 |
| 7 | யோசுவா 9 | சங்கீதம் 140,141 | எரேமியா 3 | மத்தேயு 17 |
| 8 | யோசுவா 10 | சங்கீதம் 142,143 | எரேமியா 4 | மத்தேயு 18 |
| 9 | யோசுவா 11 | சங்கீதம் 144 | எரேமியா 5 | மத்தேயு 19 |
| 10 | யோசுவா 12,13 | சங்கீதம் 145 | எரேமியா 6 | மத்தேயு 20 |
| 11 | யோசுவா 14,15 | சங்கீதம் 146,147 | எரேமியா 7 | மத்தேயு 21 |
| 12 | யோசுவா 16,17 | சங்கீதம் 148 | எரேமியா 8 | மத்தேயு 22 |
| 13 | யோசுவா 18,19 | சங்கீதம் 149,150 | எரேமியா 9 | மத்தேயு 23 |
| 14 | யோசுவா 20,21 | அப்போ. 1 | எரேமியா 10 | மத்தேயு 24 |
| 15 | யோசுவா 22 | அப்போ. 2 | எரேமியா 11 | மத்தேயு 25 |
| 16 | யோசுவா 23 | அப்போ. 3 | எரேமியா 12 | மத்தேயு 26 |
| 17 | யோசுவா 24 | அப்போ. 4 | எரேமியா 13 | மத்தேயு 27 |
| 18 | நியா. 1 | அப்போ. 5 | எரேமியா 14 | மத்தேயு 28 |
| 19 | நியா. 2 | அப்போ. 6 | எரேமியா 15 | மாற்கு 1 |
| 20 | நியா. 3 | அப்போ. 7 | எரேமியா 16 | மாற்கு 2 |
| 21 | நியா. 4 | அப்போ. 8 | எரேமியா 17 | மாற்கு 3 |
| 22 | நியா. 5 | அப்போ. 9 | எரேமியா 18 | மாற்கு 4 |
| 23 | நியா. 6 | அப்போ. 10 | எரேமியா 19 | மாற்கு 5 |
| 24 | நியா. 7 | அப்போ. 11 | எரேமியா 20 | மாற்கு 6 |
| 25 | நியா. 8 | அப்போ. 12 | எரேமியா 21 | மாற்கு 7 |
| 26 | நியா. 9 | அப்போ. 13 | எரேமியா 22 | மாற்கு 8 |
| 27 | நியா. 10,11:1-11 | அப்போ. 14 | எரேமியா 23 | மாற்கு 9 |
| 28 | நியா. 11:12-40 | அப்போ. 15 | எரேமியா 24 | மாற்கு 10 |
| 29 | நியா. 12 | அப்போ. 16 | எரேமியா 25 | மாற்கு 11 |
| 30 | நியா. 13 | அப்போ. 17 | எரேமியா 26 | மாற்கு 12 |
| 31 | நியா. 14 | அப்போ. 18 | எரேமியா 27 | மாற்கு 13 |